# பக்தி சித்தி முக்தி



அன்று



இன்று

## திருவாசகம்

(திருவம்மானை – 7)

ஓயாதே உள்ளுவார் உள் இருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதுஇருக்கும் பாதியனை
நாய் ஆன நம்தம்மை ஆள்கொண்ட நாயகனைத் தாயான
தத்துவனைத் தானே உலகு ஏழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதும் காண் அம்மானாய்.

– மாணிக்க வாசகர்

# பக்தி சித்தி முக்தி

அனுபவ சாட்சி

**ம. ரவி**

**அக்னி வெளியீடு**

த. பெ. எண். 8706

சென்னை – 600 020

# பக்தி சித்தி முக்தி

வாழ்க்கை பல விதம், அதில் நான் ஒரு விதம், இப்படித்தான் வாழவேண்டும் என்று நினைப்பவர்கள் சிலர். எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்று சாதிப்பவர்கள் சிலர். எப்படியோ வாழ்ந்தால் போதும் என்று பெருமூச்சு விடுகிறவர்கள் சிலர். எப்படியடா வாழ்வது என்று அங்கலாய்ப்பவர் சிலர். இப்படியும் ஒரு வாழ்க்கையா என்று நொந்து கொள்கிறவர்கள் சிலர்.

வாழ்க்கை வாழ்வதற்காக என்றாலும் அந்த வாழ்க்கை நிரந்தரமானது அல்ல. நீர்குமிழி போல் வர்ணஜாலம் காட்டி பட் என்று மறைந்து போவது போலவும், காலையில் பூத்து மாலையில் காய்ந்து போகிற பூவைப் போலவும் வாழ்க்கையானது மாயைக்கு உட்பட்டதாய் இருக்கிறது.

வாழ்க்கைக்காக மனிதன் கடுமையாய் உழைக்கிறான். பணத்தை தேடுகிறான். ஆனாலும் அவனுக்கு திருப்தி ஏற்படுகிறது இல்லை. புசித்தாலும் குடித்தாலும் நன்றாக உடுத்தினாலும் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்தாலும் அதிலும் அவனுக்கு திருப்தி ஏற்படுவது இல்லை.

நன்மை செய், நல்லதை நினை, வாழு, வாழவிடு, நீ வாழ பிறரைக் கெடுக்காதே, என்றெல்லாம் தத்துவம் பேசி அலைந்தாலும் நன்மை செய்ய வேண்டுமென்கிற அவனுடைய உள்ளத்தில் தீமையும் குடியிருக்கிறதைக் கண்டு தானும் வாழாமல் மற்றவர்களையும் வாழவிடாமல் வாழ்க்கை பயணத்தில் நம்பிக்கையின்றி ஓடிக் கொண்டிருப்பவனே மனிதன்.

இதில் கடவுளை நம்புவோர், நம்பாதோர் என்று இருவகை. கடவுளை நம்புவோரில் ஒரு கடவுளை நம்புவோர், பல கடவுளை

நம்புவோர், அவதாரக் கடவுகள்களை நம்புவோர் என்று பலவகை. ஏதோ ஒரு கடவுளை வணங்கினால் போதும் என்று நினைப்போரும், எந்தக் கடவுளை வணங்கினாலும் அந்த ஒரு கடவுளைத்தானே வணங்குகிறோம் என்று தத்துவம் பேசுவோரும் ஒரு வகை.

கடவுளைக் கண்டவன் யார்? கண்டவர் விண்டதில்லை, விண்டவர் கண்டதில்லை என்போரும், கடவுளே இல்லை என்போரும் ஒருவகை. கடவுள் என்று ஒருவர் இருந்தால் வறுமை, நோய், துன்பம், ஊனமுற்றோர், விபத்துக்கள், மரணம் போன்றவைகள் ஏற்படக் காரணங்கள் என்ன? இது விதியா? அல்லது முற்பிறவின் வினையா? என்று சிந்திப்போர் ஒருவகை. விடை தெரியாத நிலையில் கடவுள் இல்லை அல்லது எல்லாம் ஈசன் செயல் என்றும் தங்களைத் தாங்களே ஏமாற்றி சமாதானப்படுத்திக் கொள்கிறவர்கள் ஒருவகை. இப்படிப்பட்ட மனிதர்களுக்குள்ளே 1961ம் ஆண்டு வைகாசி மாதம் 7ந் தேதி சனிக்கிழமை பிறந்த என்னுடைய வாழ்க்கை சரித்திரத்தை இங்கே எழுதுகிறேன். என்னைப் போன்ற நிலையில் ஒருவேளை நீங்களும் வாழ்ந்திருப்பீர்களானால் என் கதை உங்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமையலாம் என்ற நம்பிக்கையுடன் இதை எழுதுகிறேன். பொறுமையுடன் தொடர்ந்து படிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

என் ஜாதகப்படி சனியின் பார்வையினால் வாழ்க்கையில் தோல்விகளும், வாழ்வதற்கு வேண்டிய வருமானமும் இன்றி தரித்திர நிலையில் இருக்க வேண்டிய நிலை உண்டாகும் என்று சொல்லப்பட்டது. ஆகையினால் என் குடும்ப ஜோசியர் மற்றும் என் குருவின் ஆலோசனைப்படி நவகிரகக் கோயிலை என்னைப் பிடித்த சனியன் தொலையும்படி சுற்றி வலம் வந்தேன். பல புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று பல தெய்வங்களைத் தரிசித்து வந்தேன். கூடுமானவரை அதிகாலை நேரத்தில் முதல் தரிசனத்தில் பங்கேற்று பக்தி நெறிமுறைகளைக் கடைப்பிடித்து வந்தேன். ஆனாலும் என்

வாழ்வில் உள்ள பிரச்சனைகள் என்னை விட்டுப்போகவில்லை, சனியின் பார்வையினால் எனக்கு சரியாகப் படிப்பு வரவில்லை. எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெறுவதற்கு 5 முறை தேர்வு எழுத வேண்டியதாயிற்று. 5வது முறை எப்படியோ தேர்ச்சி பெற்றுவிட்டேன், ஆனாலும் பல ஆண்டுகள் வேலை கிடைக்கவில்லை. சனிப் பார்வையினால் குரு பலன் கிடைக்கவில்லை. ஆகையால் வாழ்க்கை சரிவர அமையவில்லை. மனதிற்கு சமாதானமும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் சென்னையில் உள்ள பதினெண் சித்தர் மடத்தைச் சார்ந்த ஞானாச்சாரியார் – சித்தர் கருவூரார் அவர்களுக்கு நான் சீடன் ஆனேன். யாக பூசைகள் செய்யவும், வேப்பிலை அடித்து மந்திரித்து இறை வழிபாடுகள் செய்யவும் கற்றுக் கொண்டேன். என் வீட்டிற்கு அருகில் ஒரு யாகக் குண்டம் கொடிமரம் அமைத்து என் குருவின் கரங்களால் **23.7.1983** அன்று சனிக்கிழமை திறப்பு விழா நடத்தி அதுமுதல் மாலை நேரங்களில் என்னிடம் வருகிறவர்களுக்கு வேப்பிலை அடித்து மந்திரித்து அனுப்பி வந்தேன். வருமானம் கிடைக்காவிட்டாலும் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது.

என் ஜாதகத்தைப் பார்த்தவர்கள் எனக்குப் பெண்தர மறுத்தனர். வேலையும் இல்லை, திருமண வாழ்வும் இல்லை. என் வாழ்வில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை, இப்படி இருக்க ஒரு நாள் எங்கள் வீட்டிற்கு அருகில் குடியிருந்த ஒரு பாட்டியம்மாள் என்னுடைய யாக குண்டம் இருந்த கோயில் மடத்தில் உள்ள விளக்கிற்கு எண்ணை ஊற்ற வந்தார்கள். அவர்கள் ஒரு கிறிஸ்தவப் பாட்டி. அவர்கள் என்னிடம் நன்றாகப் பேசுவார்கள். என்னுடைய பிரச்சினைகளை ஒரு நாள் அவர்களிடம் மனம் திறந்து சொன்னேன். அந்தப் பாட்டி அம்மாள் இயேசு கிறிஸ்துவை நம்பினால் பிரச்சினைகள் நீங்கி சுகமாய் இருக்கலாம் என்றும், ஒரு முறை கிறிஸ்தவக் கோயிலுக்குச் (Church) சென்று ஜெபம் பண்ணிக்கொள்ளும் படியாகவும் சொன்னார்கள்.



அன்று சித்தரின் சீடனாக இருந்த **ம. ரவியின்** தோற்றம்

நான் வணங்கி வந்த தெய்வங்களுடன் இயேசு கிறிஸ்துவையும் ஒரு தெய்வமாக ஏற்றுக் கொண்டு ஞாயிற்றுக்கிழமை காலை நேரங்களில் கிறிஸ்தவ கோயிலுக்குச் சென்று வருவேன். மாலையில் வழக்கம்போல என்னுடைய யாக குண்டம் கொடி மரத்தடியில் மற்றவர்களுக்கு வேப்பிலை அடித்து மந்திரித்தும் வருவேன். ஒரு நாள் பிரசங்கம் செய்த போதகரின் போதனை சற்று வித்தியாசமாய்க் காணப்பட்டது. அந்த ஆலயத்தில் அனேகர் அமர்ந்து அவருடைய போதனையைக் கேட்டுக் கொண்டிருந்தாலும் அவர் போதித்த வார்த்தைகள் எனக்கே சொல்லப்படுவது போல் உணர்ந்தேன்.

அவர் பிரசங்கித்தது என்னவென்றால், **பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் செய்கிற ஆத்துமா சாகும். இன்று நீ மரித்தால் உன் ஆத்துமா எங்கே போகும்? மோட்சத்திற்கா? அல்லது நரகத்திற்கா? தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி உன்னை சுத்திகரிக்கும் என்பதே இவைகளைக் கேட்டபொழுது உலக வாழ்க்கைக்காக கவலைப்படுகிற நான் உன்னத வாழ்க்கையைக் குறித்துக் கவலையற்று இருக்கிறேனே என்று கவலைப்படத் துவங்கினேன். அப்பொழுது அந்தப் போதகர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீ**

**இரட்சிக்கப்படுவாய் என்று சொன்னார்.** நான் என் பாவத்தைக் குறித்து நடுங்கினேன். பாவமன்னிப்பைத் தரும் இயேசுவை நினைத்து உருகினேன். அந்த நிமிடமே இயேசுவை என் வாழ்க்கையின் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டேன். ஒரு தெய்வீக சமாதானமும் ஆன்மீக அமைதியும் மனநிறைவும் எனக்குள் ஏற்பட்டது. என்றுமில்லாத ஓர் புது சந்தோஷம் எனக்குள் ஏற்பட்டது. இயேசு கிறிஸ்துவினால் என் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நிச்சயத்தை நான் பெற்றேன்.

இந்த அனுபவத்திற்குப் பின்பு நான் என் குருவை சந்தித்து இச்சம்பவங்களை அவருக்கு அறிவித்தேன். ஆனால் அவர் என்னிடம் சற்று வெறுப்பாகவே பேசினார். இயேசு கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நீனைக்கிறீர்கள் என்று அவரிடம் கேட்டேன் அதற்கு அவர், இயேசு ஒரு ஞான சித்தர். ஆனாலும் நீ அவரை வணங்க வேண்டிய அவசியம் இல்லை. அந்தக் கோயிலுக்கு போகவும் வேண்டாம். வழக்கம் போல் உன்னுடைய கோயிலில் யாக பூசைகளை செய் என்று சொன்னார். ஆயினும் என் பாவங்களை உணர்த்தி அவைகளை அறிக்கை செய்ய வைத்து எல்லாப் பாவங்களையும் மன்னித்து என்னைப் புது மனிதனாக்கிய இயேசு கிறிஸ்துவை மறப்பதற்கோ, வழிபடுவதை நிறுத்துவதற்கோ எனக்கு மனம் வரவில்லை. மாறாக இயேசு கிறிஸ்துவின் மீது என்னை அறியாத ஒரு பக்தி மேலோங்கி நிற்பதை உணர்ந்தேன்.

நாட்கள் செல்லச் செல்ல என் வாழ்க்கை மாற ஆரம்பித்தது. பிறந்தது. முதல் என்னைப் பிடித்த சனியன், நான் இயேசுவை ஏற்றுக் கொண்டவுடன் என்னை விட்டு விலகியது இவ்வளவு காலங்களிலும் வேலை இன்றி வாழ்ந்த எனக்கு ஒரு நல்ல வேலையும் கிடைத்தது. திருமணமும் நடந்தது.

ஞானகுருவாகிய ஞானசித்தர் இயேசுவை நான் வணங்க ஆரம்பித்த பின்பு அனேக நல்ல காரியங்கள் என் வாழ்க்கையில் நடந்தன. தெய்வத்தை வெளியில் வைத்து வணங்கிய நான் என் சரீரத்தையே ஆலயமாக்கி அதில் இயேசுவை வைத்து வணங்க ஆரம்பித்தேன்.

என்னைப் போலவே நம்முடைய தமிழ்நாட்டில் ஆதி சித்தர்கள் இறைவனை குருவாகவும், தாயாகவும், தந்தையாகவும் வைத்துப் பாடி இருக்கிற அனேகப் பாடல்களை நான் கண்டேன்.

தமிழ் சித்தர்கள் மனித உடலையே ஆலயமாகவும் அதின் உள்ளிருக்கும் ஆன்மாவையே இறைவனின் பீடமாகவும் நினைத்துப் பாடி உள்ளார்கள். பின்வருமாறு காண்க:–

''கோயிலாவது ஏதடா குளமாவது ஏதடா
கோயிலும் குளமும் கும்பிடும் குலாமரே
கோயிலும் மனத்துள்ளே குளமும் மனத்துள்ளே
ஆவதும் அழிவதும் இல்லை இல்லை இல்லையே – என்றும்

புண்டரீக மத்தியில் உதித் தெழுந்த சோதியை
மண்டலங்கள் மூன்றினோடு மண்ணுகிற மாயனை
அண்டரண்டம் ஊடறுத்து அறிந்துணர வல்லிரேல்
கண்ட கோயில் தெய்வமென்று கையெடுப்பதில்லையே – என்றும்

சொல்லிலும் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியிலும்
அல்லிலும் மாசற்ற ஆகாயத்தன்னிலும் ஆய்ந்து விட்டோர்
இல்லிலும் அன்பரிடத்திலும் ஈசன் இருக்குமிடம்
கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்நுதலே! – என்றும்

நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புஷ்பம் சாற்றியே
சுற்றிவந்து முணமுணன்று சொல்லும் மந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை யறியுமோ – என்றும்

ஓசையுள்ள கல்லை உடைத்து இரண்டாய்ச் செய்வதுமே
வாசலில் பதித்த கல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
பூசைக்கு வைத்தகல்லில் பூவும் நீரும் சற்றுகிறீர்
ஈசனுக்குகந்த கல் எந்தக் கல் சொல்லுமே – என்றும்

– பழங்கால சித்தர்கள் பாடிய பாடல்கள் சிந்தனைக்குரியவைகள்.

பைபிளில் நீங்கள் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்கள் என்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாய் இருக்கிறார் என்றும் அறியாதிருக்கிறீர்களா. ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் தேவன் அவனைக் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாய் இருக்கிறது. நீங்களே அந்த ஆலயம் என்று சொன்ன வேத வாக்கு எவ்வளவு உண்மை?

இதை வாசிக்கும் அன்பு சகோதரரே நீங்கள் தெய்வத்தை எங்கே வைத்திருக்கிறீர்கள்? கட்டிடத்திலேயா? படத்திலேயோ? அல்லது உருவத்திலேயா? தெய்வம் இருக்க வேண்டிய உங்கள் சரீரத்தில் குடியையும், புகையையும், விபச்சாரம், வேசித்தனம், அசுத்தப் பழக்க வழக்கங்கள், கோபம், எரிச்சல், சண்டைகள், சந்தேகங்கள் போன்ற தெய்வங்களை வைத்து வணங்குவதாலேயே உங்களுக்கு சமாதானமும் இல்லை சந்தோஷமும் இல்லை. இவ்விதமான தீய குணங்களை இயேசு உங்களுக்கு தரவில்லை. மாறாக இக்குணங்களை உங்களுக்குள் உருவாக்கின மரணப் பிசாசைத் தன் மரணத்தினாலே வென்று தன்னை ஏற்றுக் கொள்பவர்களின் ஆன்மாவில் இத்தேவன் இலயித்திருக்கவே விரும்புகிறார். தேவன் ஆன்மாவில் இலயித்திருப்பதனால் தே.ஆ.இலயம் – தேவாலயம் என்று அழைக்கிறோம். இந்த சத்தியத்தை நான் அறிந்த பொழுது என்னில் குடியிருந்த சனியன் நீங்கியது. இயேசு கிறிஸ்துவின் நீதி என்னில் புகுந்தது? நான் மதம் மாறிய பூசாரியாக அல்ல மனம் திரும்பிய பூசாரியாகவே இருக்கிறேன்.

அன்று இறைவனை அறியாத நிலையில், என் குருவினால் 48 நாள் கொண்ட மண்டல பூசையில் வைத்து உருக்கொடுக்கப்பட்ட, வசீகர அட்சரங்கள் எழுதப்பட்ட, ஜனங்களை தன்னிடத்தில் இழுக்கும் சக்தியைக் கொண்ட செப்புதகடு ஒன்றை வீட்டில் முன் இருந்த, யாகக் குண்டம் கோயில் மடம் கொடி மரத்தின் அடியில் என் குருவினால் புதைக்கப்பட்ட மாயசக்தியை வைத்து ஜனங்களுக்கு

மந்திரித்து வந்தேன். இப்பொழுதோ கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் வாசம்பண்ணாத இறைவன் என் சரீரத்தையே கேயிலாகக் கொண்டு குடியிருக்க வந்து விட்டபடியினால் என் வீட்டின் முன் இருந்த யாகக் குண்ட கோயில் மடத்தை அகற்றிவிட முயற்சித்தேன். ஆயினும் என் தந்தை அதை விரும்பவில்லை. நான் இதற்காக ஜெபித்து வந்தேன். ஒருநாள் என் தந்தையே தன் கைகளினாலேயே அவற்றை அகற்றிவிட்டார். இதுவும் இயேசு கிறிஸ்து செய்த அற்புதமேயாகும்.

திருமூலரின் திருமந்திரத்தில் ஏராளமான கிறிஸ்தவக் கருத்துக்கள் மறைபொருளாக வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன. அக்காலத்தில் ஆரியர் ஆதிக்கம் அதிகமாய் இருந்தபடியினால் திருமூலர் தாம் அறிந்த கிறிஸ்தவக் கருத்தினை தனக்குள் மறைத்து பொதுக் கருத்தாகப் பாடியிருப்பது அப்பாடல்களைக் கவனமாய்ப் படிப்போர்க்கு விளங்கும்.

**"அண்டமோடு எண்திசை தாங்கும் தோமுகம்**
**கண்டங்கருத்த கருத்தறிவாரில்லை**
**உண்டது நஞ்சன்று உறைப்ப உணர்வோர்**
**விண்டலை மாலை விரிசடை யோர்க்கே"**

என்ற பாடலில் சிவபெருமானுடைய தொண்டை நீலநிறமானதைப் பற்றி சொல்லப்படும் புராணத்தை அறிவில்லாதோருடைய பேச்சு என்று திருமூலர் தள்ளிவிடுகிறார்.

சிவபெருமானடைய கண்டம் நீல நிறமானதின் கருத்தை அறிந்தவர்கள் இல்லை என்று கூறும் திருமூலருக்கு அக்கருத்து இன்னதென்று நிச்சயம் தெரிந்திருக்க வேண்டும். பொதுமக்களுக்குள் பரவியுள்ள சிவபெருமான் கதை தவறு என்று சொல்லிய திருமூலர் அக்கதையுடன் சம்மந்தப்பட்ட நஞ்சுண்டதேவர், விடம்கொண்டகண்டர், ஆலாலமுண்டோன் என்னும் சொற்களை பயன்படுத்துவது, ஆச்சரியமாய் இருக்கிறது.

ஆலாலம் என்பது ஆலகால விஷம் என்பதும் அது உலகத்துள் நுழைந்த பாவம் என்பதும் அந்த பாவத்தின் சம்பளம் மரணம் என்பதும் வெளிப்படை மற்றும் ஒரு பாடலில்.

"இன்பப் பிறவி படைத்த இறைவனும்
துன்பம் செய் பாசத்துயருள் அடைந்தனன்"
– என்கிறார்

இதன் பொருள் இறைவன் மனிதரை ஆனந்த நிலையில் வாழுமாறு அமைத்திருக்க அவர்கள் தங்கள் பாவச் செயலால் தங்களையே கேட்டுக்குள்ளாக்கிக் கொண்டதை கண்ட இறைவனுடைய அன்புள்ளம் மிகுந்த துயரத்திற்குள்ளானது என்பதை வெளிப்படுத்துகிறது.

சிலர் அடைந்தனன் என்ற சொல்லை அடைத்தனன் என்று மாற்றி சொல்லி விளக்கம் தருகின்றார்கள், அது தவறு.

வேறொரு கவியில்

**"சிவனை வழிபட்டாறெண்ணிலி தேவர்கள்**
**அவனை வழிபட்டங் காமா றொன்றில்லை**
**அவனை வழிபட்டங் காமாறு காட்டும்**
**குருவை வழிபடில் கூடலுமாமே"**

சிவனையே நற்குரு என்று சொன்னவர் இப்பாடலில் அனேக தேவர்கள் சிவனை வழிபட்டும் எப்பயனும் பெறவில்லை, சிவனை வழிபட்டு உய்வடையும் வழியை காண்பிக்கக் கூடிய குருவை வழிபட்டால் பயனடையக் கூடும் என்கிறார். எனவே ஒரு குருவைத் தேட இன்னொரு குருவின் துணை வேண்டியதாக இருக்கிறது. ஆனால் இந்த குரு யார் என்று திட்டவட்டமாய் சொல்லப்படவில்லை அதே நேரத்தில்

“மருவன்றியே நின்ற மாயப்பிரானை
குருவன்றியார்க்கும் கூட ஒண்ணாதே”

என்று குருவின் முக்கியத்தையும் வலியுறுத்துகிறார்.

இதிலிருந்து களங்கம் இல்லாத ரூபமற்ற கடவுளை ஒத்த குருவின் துணையால் அன்றி எவராலும் கடவுளை அணுக முடியாது என்பதே திருமூலரின் கருத்தாகும். எப்படியெனில் கையும் களவுமாய்ப்பிடிப்பட்ட கள்வனைப் பிடித்துக் கட்டிப் போட்டிருக்கும் நிலையில், அக்கள்வன் தன்னை உணர்ந்து மனந்திருந்தி கதறி அழுது புலம்பினாலும் அவனுடைய கட்டுகள் தானே அறுந்து விழாது. அவனுடைய பாவ உணர்வைக் கண்டு அவன்மேல் இரக்கம் கொண்டு அவனுக்கு ஈடாக தன்னையே பணையம் வைத்து அவன் கட்டுகளை அவிழ்க்க வேறொருவன் வந்தால் அன்றி அக்கள்வனுக்கு விடுதலை இல்லை. இதனை

“கட்டுண்ட கள்வன் தானோ கட்டினை விட்டுக் கொள்வான்
விட்ட வேதனையைத் தீர்க்க விடுவிப்பான் ஒருவன் வேண்டும்
அட்டமா சித்திகளைக் கால் அறிவினால் அறியலாகும்
தட்டறப்பாசம் தீர்க்கத் தற்பரகுருவே வேண்டும்.”

இங்கே இப்பாடலில் தற்பரன் ஆகிய இறைவனே குருவாக வருதல் வேண்டும் என்பது தெளிவாகிறது. இவர் எப்படி வருவார்? எங்கிருந்து வருவார்? என்ன செய்து பாவத்தை போக்குவார்? என்பதை வேறொரு பாடலில்

“விண்ணின்றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக் காவல் மேல்வைத்து
உண்ணின்று உருக்கி ஓர் ஒப்பில்லா ஆநந்தக்
கண்கொண்டு காட்டிக் களிம்பறுத்தானே”

குரு என்றால் பாவத்தைப் போக்குகிறவர் பாவமாகிய களிம்பை அறுத்தெடுக்க இறைவன் வானத்திலிருந்து இறங்கி வந்து பாவத்தின்

சம்பளமாகிய மரணத்தைத் தன் சரீரத்தில் தானே ஏற்றுக்கொண்டு அதினால் உண்டான நித்திய மீட்பை அளித்தார் என்று குறிப்பிடுகிறார். இப்படிப்பட்ட குருவை எப்படிக் கண்டு பிடிப்பது என்ற கேள்விக்குப் பதிலாக மறைமுகமாக ஒரு பாடல் எழுதுகிறார்.

அது : –

"நீரிலே முளைத்தெழுந்த தாமரையின் ஓர் இலை
நீரிலே நின்றவானும் நீரில்லாத வாறுபோல்
பாரியே முளைத் தெழுந்த பண்டிதப் பராபரம்
பாரினோடு கூடி நின்ற பண்பு கட்டிருப்பீரே"

இப்படிப்பட்ட குருவின் துணையின்றி யாராலும் கடவுளை அணுக முடியாது என்று சொல்வதற்கும் கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு குருவாய் இருக்கிறார்." என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடத்தில் வாரான்" என்ற இயேசு கிறிஸ்து பெருமானின் அருளுரைக்கும் உள்ள ஒற்றுமை கவனிக்கத் தக்கது. எனவே திருமூலரின் கருத்துக்களிலே கிறிஸ்துவின் நற்செய்திக்கான குறிப்புகள் இருப்பதை நான் கண்டு மகிழ்கிறேன். சிலர் இக்கருத்துக்களில் வேறுபடலாம். (மேற்கண்ட திருமூலர் பற்றிய கருத்துக்கள் **"யார் இந்த இயேசு"** என்ற புத்தகத்தில் 192ம் பக்கம் முதல் 197 வரையில் உள்ள கருத்துக்களை மையமாக கொண்டது. பதிப்பு ஆசிரியர் டாக்டர். தயானந்தன் பிரான்சிஸ் அவர்கள்) வள்ளுவர் பெருமானும் கடவுள் வாழ்த்தில் இருள்சேர் இருவினை என்று குறிப்பிடுவது இருளாகிய பாவம் சேருகின்றன இரண்டு வினைகளாகிய பிறப்பினால் உண்டாகும் பாவம். செயலினால் உண்டாகும் பாவம் என்பதையே கூறுவதுபோல் தோன்றுகிறது. கிறிஸ்துவத்திற்கும், திருக்குறளுக்கும் உள்ள தொடர்பை உற்று நோக்கின் கீழ்க்கண்ட குறள்கள் ஆலோசனைக் குரியவைகளாகும்.

- ✤ பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
  இறைவன் அடிசேரா தார் – குறள் 10
- ✤ இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
  பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு – குறள் 5
- ✤ பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
  நெறிநின்றார் நீடுவாழ் வார். – குறள் 6
- ✤ அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
  பிறவாழி நீத்தல் அரிது – குறள் 8
- ✤ தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
  மன்னுயி ரெல்லாம் தொழும் – குறள் 268
- ✤ இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
  என்ன பயத்ததோ சால்பு – குறள் 987

ஆதாமின் வழியாக பாவமானது உலகம் முழுவதையும் ஒருவனின் பிறப்பிலிருந்து தொடர்ந்து வருகிற காரணத்தினால் பிறவிப் பெருங்கடல் என்ற வள்ளுவர் கூறுகின்றார்.

இருள்சேர் இருவினையாகிய பாவத்திலிருந்து மனதின் விடுதலை பெற இறைவன் இயேசுவாக தோன்றி சிலுவையாகிய பொறியின் மூலமாக ஐம்புலன் ஆகிய சரீரத்தை பலியாக தந்து ஈட்டிய பொருளை வள்ளுவர் இறைவன் பொருள் என்று குறிப்பிடுகிறார்.

இந்த இறைவன் ஈட்டியுள்ள பொய்தீர் ஒழுக்க நெறியாக இறைவன் பொருளை சேர்ந்தவர்கள் பிறவிப் பெருங்கடல் பிறவாழி ஆகிய இருள்சேர் இருவினைகளில் இருந்து விடுதலை பெற்று நித்திய ஜீவனை அடைந்தவர்கள் எனக் கூறுவதாக வள்ளுவரின் கடவுள் வாழ்த்து அமைந்துள்ளது.



இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பொழுது
**ரவிபால்**

அறவாழி அந்தணன் ஆகிய கடவுள் எல்லா உயிர்களும் செந்தன்மை பூண்டு ஒழுக்கத்து நீத்தார் ஆகி ஒழுகிக்காட்டிய அறமே வள்ளுவரின் பொய்தீர் ஒழுக்க நெறியாகும். அந்த அறத்தை விவரிப்பதே வள்ளுவர் நூல் செய்த நோக்கம் ஆகும்.

எவ்வுயிர்க்கும் செந்தன்மை பூண்டு தன்னுயிர்தான் அறப்பெற்று இன்னா செய்தாற்கும் இனியவே செய்து குருவாக உலகில் தோன்றி குமரக்கடவுளாக தம் தந்தையின் விருப்பத்திற்கு பணிந்து உலகத்தின் பாவங்களை தன்மீது ஏற்றுக்கொண்ட திருக்குறளின் கடவுள் இயேசு கிறிஸ்துவாக இருக்க வேண்டும் என்பது டாக்டர் மு. தெய்வநாயகம், எம்.ஏ.பி.எச்.டி., அவர்களின் கருத்தாகும் (விவிலியம், திருக்குறள் சைவசித்தாந்தம் ஒப்பாய்வு நூல்) இக்கருத்து என்னை இயேசுவின்பால் இன்னும் அதிகமாய் இழுத்துச் சென்றது.

மரணமில்லா பெறுவாழ்வு பற்றி வள்ளலார் அவர்கள் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார். :-

இறந்தவர் எல்லாம் எழுந்திட உலகில்
அறந்தலை அழித்த அருட்பெருஞ்சோதி
செத்தவரெல்லாம் சிறித்தாங்கெழுதிறல்
அத்தகை காட்டிய அருட்பெருஞ்சோதி
இறந்தவர் எழுக என்றெண்ணியாங் கெழுப்பிட
அரந்தனை எனக்கருள் அருட்பெருஞ்சோதி
அஞ்சலை நீ ஒரு சிறிதும் என்மகனே

அருட்பெருஞ்சோதியை அளித்தனம் உனக்கே
துஞ்சியமாந்தரை எழுப்புக நலமே
சூழ்ந்த சன்மார்க்கத்தினால் செலுத்துக சுகமே — என்றும்
செத்தாரையெல்லாம் திரும்ப எழுப்புதல் இங்கு
எத்தால் முடியும் எனில் எம்மவரே — சத்தாம்
அருட்பெருஞ்சோதி அதனால் முடியும்
தெருட் பெருஞ் சத்தியம் ஈதே. — என்றும் பாடிய

பாடல்கள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும், கிறிஸ்துவுக்குள் மரித்தோர் உயிர்த்தெழுதலையும் சுட்டிக்காட்டுகின்றதோ என்று பைபிள் கருத்தை நினைக்கத் தூண்டுகிறது.

பிற்கால இதிகாசக் கதைகளும் இப்படிப்பட்ட சத்தியங்களை வெளிப்படுத்துவதற்காக எழுதப்பட்டனவோ என சிந்திக்கத் தூண்டுகிறது.

தெரிந்து கொள்ளப்பட்ட தம்முடைய சந்ததியாகிய இஸ்ரவேலருக்கு நாடு கிடைக்கச் செய்ய இறைவனே முன்னின்று யுத்தம் செய்து அந்நிய அரசர்களை அழித்து இஸ்ரவேலருக்கு துணை செய்தது போன்ற சம்பவமே இந்தியாவில் மகாபாரத யுத்தக் கதையாக எழுதப்பட்டிருக்கலாம் என்று யோசிக்கிறேன்.

இறைவனின் மனைவியாகிய ஆன்மாவை பாவமாகிய அரக்கன் சிறைப்படுத்திக் கொண்டு போக இறைவன் அவ்வரக்கனைக் கொன்று தன் மனைவியாகிய ஆன்மாவை மீட்டு (திருச்சபை மீட்டு) அதைப் பரிசுத்தப் படுத்தும்படி அக்கினி அபிஷேகம் தந்து முடிவில் தன்னுடன் சேர்த்துக் கொள்ளும் பைபிளின் கருத்தே இராமாயணக் கதையாக இருக்கலாமோ என்று யோசிக்கிறேன்.

தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஒரு போராட்டம் உண்டு. அதேபோல் குடும்பத்திலும் சமுதாயத்திலும் போராட்டம் உண்டு.

இப்போராட்டங்களில் மனிதன் தன் முயற்சிகளை கைவிட்டு எல்லாவற்றையும் செய்து முடித்த, நானே வழியும், சத்தியமும், ஜீவனும், ஆதியும், அந்தமும், உயிர்த்தெழுதலுமாய் இருக்கிறேன் என்று சொன்ன இயேசு பெருமானிடம் சரணடைந்து சித்தி பெறுவதே பகவத்கீதையாக எழுதப்பட்டதோ எனவும் யோசிக்கிறேன்.

மேலும் தாண்டிய மகாபிராமணம் 7வது அதிகாரம் 7வது காண்டத்தில்

**பிரஜாபதிர் தேவப்பியாஹும்**
**ஆத்மானம் யக்யம் க்ருத்வா ப்ராயச்சித்**

பிரஜாபதியாகிய சிருஷ்டிகர்த்தர் மனித ஆத்மாக்களின் பாவத்தைப் போக்கத்தான் சரீரத்தையே பிராயச்சித்த பலியாகத் தருவார் என்ற தாண்டிய மகாபிராமணப் பாடலும் சிந்தனைக்குரியவைகளாகும் கிறிஸ்துவுக்குப்பின் வந்த தாயுமானவர்

"அன்பைப் பெருக்கி என் ஆருயிரைக் காக்க வந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே
தன்னைத் தந்து என்னைத் தடுத்தாட்கொண்ட – நின்
கருணைக்கு
என்னைத் தந்து என்ன பயன் எந்தாய் பராபரமே"

என்று பாடியதும் இந்த இயேசு பெருமானையே என்பது என் அனுமானம், இப்படிப்பட்ட பாடல்களைப் படிக்கும்போது இயேசுவின் குண நலன்களே இப்பாடல்களில் மறைமுகமாகச் சொல்லப்பட்டிருப்பதை உணர்ந்தபடியினால் இந்த இயேசுவையே என் குருவாகவும், ஞானமாகவும், இரட்சகராகவும், தெய்வமாகவும் ஏற்றுக்கொண்டு அவர் வழி நடந்து அவருக்குக் சாட்சியாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். சிலருக்கு மேற்கண்ட விளக்கங்களில் கருத்து வேறுபடலாம். நியாயமான தவறு இருப்பின் சுட்டிக்காட்டினால் நலமாக இருக்கும், ஏற்றுக் கொள்கிறேன்.

இயேசு கிறிஸ்து சரித்திரப் பூர்வமாகக் பிறந்து, பரிசுத்தமாய் வாழ்ந்து பாவத்திற்காக பலியாகி, மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்து அனேகருக்கு காட்சி அளித்து வானுலகம் சென்று மறுபடியும் வர இருக்கிறார். இயேசு கிறிஸ்து சொல்லுவது என்னவென்றால்.

- வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.
- என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை.
- என்னை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் மரித்தாலும் பிழைப்பான்.
- என்னுடைய சமாதானத்தையே நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக.
- நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.
- பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான். – யோவான் 8:34
- பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டும். – மாற்கு 2:10
- என் வசனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு, அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்படிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன். – யோவான் 5:24

❖ இதோ சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோட கூட வருகிறது என்ற திருவாசகங்களே!

**பாவங்களுக்காக மரித்துப் பாவமன்னிப்பை அருளுகிற இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றிப் பாவ மன்னிப்பைப் பெற்று, மன சமாதானத்துடன் வாழ்கின்ற வாழ்வு எனக்கு மிகவும் எளிதாய்ப் படுகின்றது. இதைக் காட்டிலும் எளிதான வழி இருக்குமானால் யோசியுங்கள், எனக்கும் சொல்லுங்கள்.**

எவ்விதக் கிரியைகளினாலுமல்ல, இயேசு கிறிஸ்துவின் கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்படுகிறோம். இது மனிதனால் உண்டானதல்ல, தேவனுடைய ஈவு.

பக்தி நல்லது, இறைவனை அடைவதற்கு பக்தி வழி சிறந்தது, ஆயினும் பக்தி முக்தி அல்ல, முக்தி என்கிற வார்த்தை மோட்சம் அல்லது இரட்சிப்பு என்று பொருள்படும்.

பக்தியை யாரிடத்தில் செலுத்தினால் முக்தி அடையலாம் என்பதை யோசித்து செயல்படவேண்டும். முக்தி இல்லேயேல் சித்தி பெற இயலாது, சித்தி என்பது மரணமில்லாப் பெருவாழ்வை (நித்திய ஜீவன்) குறிக்கும். இயேசுவின் அழைப்பை ஏற்று அவர் வழிநடப்பது, **பக்தி.** அவர் சிந்தின இரத்தத்தினால் பாவமன்னிப்பைப் பெறுவது **முக்தி,** அவரிடத்தில் நிலைத்திருந்து இறுதியில் பெறுவது **சித்தி.**

**அஸோத்தா ஸத் கமய**
**தமோஸமா ஜ்யோதிர் கமய**
**மிருத்யோமா அம்ருதம் கமய – (பிருகதாரண்யக உபநிஷத்து)**

(சத்தியம் இல்லாததிலிருந்து சத்தியத்திற்குள் வழி நடத்தும், இருளில் இருந்து ஒளிக்கு வழி நடத்தும், மரணத்தில் இருந்து ஜீவனுக்குள் வழி நடத்தும்.)

உலகத்தின் பாவத்தை மன்னிக்க இறைவன் பலியாக வேண்டும் என்கிற குறிப்பு சமஸ்கிருத வேதங்களில் காணப்படுகின்றன.

இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே இத்தகைய குறிப்புகள் சமஸ்கிருத வேதங்களில் காணப்படுவது சிந்தனைக்கும் ஆய்வுக்கும் உரியதாகும்.

குறிப்பாக ரிக்வேத புருஷசூக்தத்தில் புருஷன் (மனிதன்) ஆகிய பிரஜாபதி பலியாக வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. ரிக்வேதம், சாமவேதம், அசுர்வேதம், பிராமணங்கள், ஆகமங்கள், உபநிஷத்துக்கள் ஆகிய நூல்களில் பிரஜாபதியாகிய கடவுள்

1. ஒரு கன்னிகையின் கர்ப்பத்தில் தோன்றுவார் என்றும் (குமாரி கர்ப சம்பவா)
2. அவர் பாவம் இல்லாத பரிசுத்தர் என்றும் (நிர்க்களங்க புருஷ)
3. மற்ற மனிதர்களினின்று பிரித்தெடுக்கப்படுவார் என்றும் (அசுவமேத யாகத்தில் பிரித்தெடுக்கப்பட்ட குதிரையின் தலையில் காட்டு முள்கொடி சுற்றி வைக்கப்படுவதும். அக்குதிரையின் உடல் மக்கள் எனவும் தலை பிரஜாபதி எனவும் கருதப்படுவது மரபு.)
4. பிரஜாபதி ஒரு மரத்தில் கட்டப்படுவார் என்றும்
5. அவருடைய உடலில் இருந்து இரத்தம் வடியும் என்றும்
6. அவர் மவுனமாக துன்பங்களை சகிப்பார் என்றும்
7. அவர் எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்றும்
8. அவர் தன் உயிரை தானே பலியாக்குவார் என்றும்
9. அவர் மீண்டும் உயிரோடு எழுப்பப்படுவார் என்றும்
10. தன்னை உலகிற்கு முழுவதமாய் அர்ப்பணிப்பார் என்றும்

பல இடங்களில் இக்குறிப்புகள் சிதறிக் கிடப்பதைக் காணலாம். இவைகளை சிந்திக்கும் இடத்தில் இக்குறிப்புகள் யாவும் உலக இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் பலிக்கே ஒப்பிடத்தக்கவை என்று எண்ணத் தோன்றுகிறது.

மேற்கண்ட குறிப்புகள் இயேசு பிரானைத் தவிர வேறொரு தெய்வத்திற்கு பொருந்தும் என்று யாராகிலும் சொல்லக் கூடுமேயானால் அதையும் வரவேற்று ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன்.

அப்படி இல்லாத பட்சத்தில் நான் கண்ட இயேசுவை நீங்களும் விசுவாசித்து பாவமன்னிப்பை பெற்று நித்திய ஜீவனை அடைந்து கொள்ள வேண்டி நிற்கிறேன்.

**நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து (இயேசு) நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்.** – *ரோமர் 5:8*

நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் (இயேசு) தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார், அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் – *1 பேதுரு 2:24*

ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான் – ரோமர் 10:13



இன்று இயேசு கிறிஸ்துவின்
பக்தனாகிய **ரவிபால்** என்கிற **ம.ரவி**

நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். – யோவான் 14:6

கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும், சிறியோரையும் ஆசீர்வதிப்பார் – சங்கீதம் 115:13

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களுக்கு சமாதானமும் நித்திய ஜீவனும் அருளுவாராக.

***நன்றி வணக்கம்!***

இவண்
**ம. ரவி (ரவிபால்)**
எண். 51/1, V.S.M. தோட்டத் தெரு
(மேற்கு சைதாப்பேட்டை)
ஜாப்பர்கான்பேட்டை
சென்னை - 600 083

---

**M. RAVI (RAVIPAUL)**
No. 51/1, V.S.M. Garden Street, Jafferkhanpet, (West Saidapet)
Chennai - 600 083. India Mobile : +91 - 94440 18182

## வாழ்த்துப் பாடல்

உலகெலாம் உய்யவேண்டி உருக்கொடு மண்ணில் வந்தாய்
நலமிகு உவமையாலே ஞானசீலங்கள் சொற்றாய்
கலகமுங் கரவுங் கொண்ட கண்ணிலாப் பேயைச் சாய்த்தாய்
அலகிலா ஒளியே! இயேசு ஐயனே! போற்றி! போற்றி!

தரையினில் உதித்த கோலம் தையல் கைவளர்ந்த கோலம்
வரையினில் இவர்ந்த கோலம் வனத்தினில் நடந்த கோலம்
திரைகடல் கடந்தகோலம் சிலுவையில் பொதிந்த கோலம்
உறைமனம் ஜெபத்தால் பெற்றேன் உத்தம போற்றி! போற்றி!

அன்பினால் யாக்கையேற்ற ஐயனே! போற்றி! போற்றி!
மன்பதைப் பாவந்தீர்க்க மரித்தவா! போற்றி! போற்றி!
இன்புற உயிர்த்தெழுந்த ஈசனே! போற்றி! போற்றி!
என் பிழை பொறுக்கும் இயேசு எந்தையே! போற்றி! போற்றி!

பராபரக் கடவுள் வாழி! பரிசுத்த ஆவி வாழி!
நிராமரக் குமரன் வாழி! நிறையருள் அடியார் வாழி!
புராதன மொழிகள் வாழி! புண்ணியச் சிலுவை வாழி!
விராவிய குருதி வாழி! வியன் சபை வாழி! வாழி!

– திரு.வி. கலியாணசுந்தர முதலியார்

# அனுபவசாட்சி

Bro ரவிபால் அவர்கள் முன்பு பூசாரியாய் இருந்தபோது தன் வாழ்க்கையில் நேர்ந்த அனுபவத்தை சாட்சியாய் கூறும் சிறு நூலை வாசிக்கும் உங்களை கர்த்தர் ஆசீர்வதிப் பாராக.